செய்யப்பட்டிருக்கிறது. பனப்பாக்கத்தில் ஆரம்பிக்கின்ற அந்த ஆராய்ச்சி நிலையத்தில் எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசீய சித்த ஆராய்ச்சி நிலையமாக உருவாக்கப்படும். இதற்கு மத்திய அரசு உதவியும் கிடைக்கிறது. மத்திய அரசு உதவியாக மூன்றில் இரண்டு பங்கும், மாநில அரசு உதவியாக மூன்றில் ஒரு பங்கும் செலவிட இருக்கிறது. மேலும் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் சித்த பட்டப் படிப்பு கல்லூரியும், 11 சித்த மேற்பட்டப் படிப்புத் துறையும், சுமார் 500 சித்த மருத்துவப் பிரிவை உண்டாக்கும் திட்டமும் மற்றும் பிற ஆராய்ச்சிப் பிரிவுகளும் அமைக்கப்படும்.

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்புகளாகப் பொருத்தும் சட்டம்

*6198 திரு. சி. கோவிந்தராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்தில் இறந்தவர்களின் உறுப்புகளை மாற்று உறுப்புகளாகப் பொருத்தும் (Cadavar Organ of Transplantation) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஏதும் இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட சட்டம் தமிழ்நாட்டிலும், மகாராஷ்டிரத்திலும் கொண்டு வரப்பட்டு ஏதோ சில சட்டச் சிக்கல் காரணமாக இது அமல் செய்யப்படாமல் இருக்கிறது என்ற ஒரு செய்தி கிடைத்து இருக்கிறது. இந்த மனித உறுப்புகள் குறிப்பாக சிறுநீரகம், இருதயம், ஈரல் போன்றவைகளை உடனே பொருத்துவதால் பல்வேறு வியாதியஸ்தர்களை உயிர் இழக்கும் ஆபத்திலிருந்து மீட்கும் நிலை இருப்பதால் கிட்டத்தட்ட அதற்கு உதவி செய்யும் அந்த மருத்துவச் சட்டம் இங்கே வந்திருக்கிறது. சட்டச் சிக்கல் காரணமாக அதை அமல் செய்யாத காரணத்தால் இங்கே சென்னையில் குறிப்பாக சிறுநீரகம் ஏராளமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விற்பனை ஆகிறது என்று சொல்லி வெளிநாடுகளிலிருந்து சிகிச்சைக்காக இங்கே வந்து அரசு பொது மருத்துவமனை, அப்போலோ ஆஸ்பத்திரி ஆகிய இரண்டைத் தவிர மற்ற எல்லா தனியார் மருத்துவமனைகளிலும் அப்படிப்பட்ட உறுப்பு பொருத்தும் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. ஏழைகள் 25 ஆயிரம் ரூபாய்க்கு சிறுநீரகங்களை விற்கிற நிலைமை இருக்கிறது. வெளிநாட்டுக்காரர்கள் 1 இலட்சம் 2 இலட்சம் ரூபாய்க்கு வாங்குகிறார்கள். இது தமிழ்நாட்டுக்கே அவமானம். ஆகவே, சட்டச் சிக்கலைத் தீர்த்து, சட்டத்தை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்தில் இறந்தவர்களைப் பற்றி காவல்துறை மூலமாக உடனடியாக விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. விபத்து நடந்து 6 மணி நேரத்திற்குள் உறுப்புகளை எடுத்தாக வேண்டும். ஆனால் உடலை பரிசோதனை செய்த பிறகுதான் உறுப்புகளை எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. எவ்வாறு இந்த முறையை அமல்படுத்த முடியும் என்பதைப் பற்றி சிறுநீரகம் சம்பந்தப்பட்ட துறையையும், இருதயம் சம்பந்தப்பட்ட துறையையும் கேட்டிருக்கிறோம். அவர்களும் குறிப்புகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. பரிசீலனை முடிந்த பிறகு அது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கலே இங்கேதான் இருக்கிறது. விபத்தில் இறந்தால் உடனடியாக ஆர்டிபிஷியலாக பம்ப் செய்து வெளிநாடுகளிலே உறுப்புகளை எடுக்கிறார்கள். உயிர் பிரிந்து 6 மணி நேரம், 8 மணி நேரம் ஆனதற்குப் பிறகு எடுத்து பிரயோஜனம் இல்லை. அதற்கு முன்னால் ஆர்டிபிஷியலாக பம்ப் செய்து எடுக்கின்ற முறை மேல்நாடுகளிலே பல்வேறு இடங்களிலே இருக்கிறது. அதைத்தான் மருத்துவத் துறையினர் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து அந்த முறையிலே சட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் குறிப்பிட்டேன். விபத்து நடந்தவுடனே இறந்தவர்களை உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முடியாது. அதற்கான காவல்துறை சம்பந்தப்பட்ட விதிமுறைகள்

இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாக, மருத்துவத் துறையையும் காவல் துறையையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்த பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறத்தல்.

*2063 திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் சுந்திராபுரம் பகுதியில் மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

(ஆ) அந்த ஆலையை அரசே ஏற்று நடத்துமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு இந்த ஆலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள தேவையான முயற்சிகளை எடுத்தது. இருப்பினும் இவ்வாலை தொழிலியல் மற்றும் நிதியியல் மறு சீரமைப்பு வாரியத்தின் முன்னால் நிலுவையில் உள்ளது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அங்கே பணியாற்றும் 25 இலங்கை அகதிகளுக்காக முன்பிருந்த அரசாங்கம் இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. எனவே, அரசாங்கமே இந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை எடுத்து நடத்துவதற்காக முயற்சி செய்தபோது மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது. ஆனால் இப்போது இந்த ஆலையினுடைய உரிமையாளரே அதைத் திறப்பதற்காகத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு, இப்போது பி. ஐ. எஃப். ஆர்.-ல் பெண்டிங்காக இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதைத் தீர்த்து அதைத் திறக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் திறப்போம் என்று